நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்களும் கொண்டு வந்துள்ள இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பு பற்றிச் சில விவரங்களை வெளியிட விரும்புகிறேன்.

12-5-1998 அன்று இரவு 7½ மணி அளவிற்கு திருவாரூர் நகரம் மேலக் கடைத் தெருவில் சுப்பிரமணியம் என்பவருடைய மகன் குமரன் என்பவர் முன் விரோதம் காரணமாக எதிரிகள், *(1)* ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி *(2)* செந்தில் *(3)* சோபா - இவர் எதிரி 1-ன் தம்பி, *(4)* செட்டி *(5)* சிங்காரவேலு *(6)* முத்துக்கிருஷ்ணன், *(7)* சரவணன் மற்றும் சிலரால் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே குமரன் இறந்துவிட்டார். குமரன் கடந்த 1½ மாதங்களாக பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்து வருகிறார். இதற்கு முன் அவர் அ.இ.அ.தி.மு.க.விலே இருந்திருக்கிறார்.

முற்பகல் 10-35

இவரது நெருங்கிய நண்பர் பி. நாகேந்திரன் இன்னமும் அ.இ.அ.தி.மு.க.விலேதான் இருக்கிறார். இவர்கள் இருவரின் போட்டித் தரப்பினர்—ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி, ஜெயலலிதா பேரவையின் செயலாளர். எதிரிகள் பட்டியலிலே உள்ளவர்களும் அ.இ.அ.தி.மு.க.வின் உறுப்பினர்கள் மற்றும் அனுதாபிகள். இரு பிரிவினருக்கும் தனிப்பட்ட முறையிலே முன் விரோதம் இருந்து வந்தது. கடந்த *4-5-1998* ஆம் நாள் திருவாரூர் தாலுகா அலுவலகத்தில் அயல்நாட்டுத் தயாரிப்பு இந்திய மது வகைகள் விற்பனைக்கான ஏலம் நடத்தப்பட்டதில் *6*-ஆம் எண் கடையின் விற்பனை உரிமையை மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி ரூ.*10* லட்சத்து *75* ஆயிரத்திற்கு ஏலம் எடுத்துள்ளார். அதே கடையை, குமரன், நாகேந்திரனுக்காக ஏலம் கேட்டுள்ளார். ஏலம் நடைபெறும்போது, 'ஏன் ஏலத் தொகையை ஏற்றிவிட்டுக் கொண்டு இருக்கிறாய்' என்று குமரனுக்கும், மூர்த்திக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு, அது அந்த இடத்திலே சமாதானப்படுத்தி வைக்கப்பட்டது. குமரனைக் கொலை செய்தது தொடர்பாக திருவாரூர்

நகரக் காவல் நிலையக் குற்ற எண் 343/98, பிரிவுகள் 147, 148, 341, 324 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலே உள்ளது. குற்றவாளிகளில் சரவணன், சிங்காரவேலு என்ற இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். மற்ற குற்றவாளிகளைத் தேடுகின்ற பணி தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே ஏற்பட்ட தகராறில், ஏலம் கேட்டவர்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். நாகேந்திரனும், தட்சிணாமூர்த்தியும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். இதிலே குமரன், நாகேந்திரனுக்காக ஏலத் தொகையை உயர்த்தினார், அதனால் தட்சிணாமூர்த்திக்கு 10¾ இலட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கும் நிலைமை ஏற்பட்டது என்ற ஆத்திரத்தில் விளைந்த விளைவு இது என்று கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்டவர் ப.ஜ.க. காரர் என்பதால் இதிலே மதவாதம் எதுவும் இல்லை. கொலை செய்யப்பட்டவரும், கொலை செய்தவரும், இருவருமே ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே இது மதப் போட்டி அல்ல, மதுப் போட்டிதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவில் இந்தப் பிரச்சினையை இதோடு போலீசார் நிறுத்தாமல், மேலும் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்ற உறுதியை இந்த அவைக்கு வழங்கி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

(ஆ) போலி மருத்துவர்கள் செயல்பட்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாட்டில் போலி மருத்துவர்கள் பரவலாகச் செயல்பட்டு வருவதால் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. அ.வ. அப்துல் நாசர் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. டி. மணி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மனோகரன் என்கிற ஒரு டாக்டர் ஒரு குழந்தைக்கு சிகிச்சை செய்து, அந்தக் குழந்தையின் பெயரும் மனோகரன், அந்தக்